# பாசன மேலாண்மைப் பணிகளில் விவசாயிகளின் பங்கேற்பு

**1.** **வேளாண்மை சிறக்க மிகவும் இன்றியமையாதது பயிர்களுக்குத் தேவையான நீராதாரம், நீராதாரம் சிறப்பாக இல்லையெனில், வேளாண் உற்பத்தித் திறனை பெருக்க இயலாது. நீர், வேளாண்மையின் ஒரு முக்கிய இடுபொருளாகும், எனவே, நீர் விவசாயிகளுக்குத் தேவையான நேரத்தில், தேவையான அளவில், நம்பத்தகுந்த வகையில் கிடைத்தால் அன்றி வேளாண் உற்பத்தித் திறன், மொத்த உற்பத்தி ஆகியவை சிறக்க இயலாது.**

i. **பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பாசன அமைப்பு முறைகளின் மூலம் கிடைக்கப்பெறும் தண்ணீர் உரிய நேரத்தில் தேவையான அளவில் கிடைப்பதில் பல சிரமங்கள் உள்ளன, முக்கியமாக, கடைமடை விவசாயிகளுக்கு நீர் சரிவர கிடைக்காததினால் வேளாண் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது. பயன்பெறும் விவசாயிகள், பாசன அமைப்பு முறைகளைப் பேணுவதிலும் இயக்குவதிலும் பங்கு கொள்ளாததே இதற்கு முக்கிய காரணம் என்று உலகளவில் கண்டறியப்பட்டுள்ளது.**

ii. **வேளாண் உற்பத்தியை பல மடங்கு பெருக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில், இப் பணியில் விவசாயிகளை ஈடுபடச் செய்யவேண்டும் என்பதனை மத்திய, மாநில அரசுகள் நன்கு உணர்ந்துள்ளன,**

iii. **தமிழக அரசு, பாசன மேலாண்மைப் பணிகளில், விவசாயிகளும் பங்கேற்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் பல செயல் திட்டங்கள் மூலம், பாசனதாரர்களை ஊக்குவித்து பங்கேற்க தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.**

**2.** பாசன மேலாண்மைப் பணிகள் என்றால் என்ன?

**மழையின் மூலமாக கிடைக்கப்பெறும் தண்ணீரானது, நீர்த்தேக்கங்கள் மற்றும் அணைக்கட்டுகளில் தேக்கப்பட்டு கால்வாய்கள் மூலமாக விளை நிலங்களை அடைந்து பயிர்கள் பாசன வசதி பெறுகின்றன. மேற்கண்ட நீர் சேகரிப்பு மற்றும் நீர் விநியோகிக்கும் கட்டுமானங்களை இயக்கி பாசனதாரர்களுக்கு சரி விகிதாசாரமாக தண்ணீர் கிடைக்கும் வகையில் நீர் பங்கீட்டுப் பணிகளை செயற்படுத்துவதற்குத் தேவையான பணிகள் தான் பாசன மேலாண்மைப் பணிகள் எனப்படுகின்றன.**



**3.** விவசாயிகளின் பங்கேற்புப் பணிகள்

i. பாசன காலம் துவங்குவதற்கு முன் விவசாயிகள் மற்றும் சங்கப் பொறுப்பாளர்கள் அனைவரும் நீர்வள ஆதார அமைப்பின் பொறியாளர்களுடன் கலந்தாலோசித்து, வரும் பாசனப் பருவ காலத்தில் கிடைக்கக்கூடிய தண்ணீரின் அளவு, நீர் வழங்கும் முறை, அட்டவணை இவை பற்றி முடிவெடுத்தல்,

ii. கலந்தாலோசனையின் போது, ஒப்புக்கொள்ளப்பட்ட அளவின் படியும், அட்டவணையின் படியும் நீர்வள ஆதார அமைப்பின் பொறியாளர்கள் பகிர்மான வாய்க்கால்களின் தலைப்புகளில் பாசன பருவ காலம் முழுமைக்கும் நீர் வழங்கக் கடமைப்பட்டவர்களாவார்கள்,

iii. அவ்வாறு பகிர்மான வாய்க்கால்களின் தலைப்புகளில் வழங்கப்பட்ட நீரினை விவசாய சங்கப் பொறுப்பாளர்கள், ஆயக்கட்டுதாரர்களுக்கு அவரவரின் ஆயக்கட்டுப் பரப்பிற்கேற்ப விகிதாசார அளவில் பகிர்ந்தளிக்க வேண்டும்,

iv. இந்நீர்ப் பங்கீட்டுப் பணியினைத் திட்டமிட்டு செயல்படுத்தத் தேவையான அனைத்து தொழில் நுட்ப உதவிகளையும் நீர்வள ஆதார அமைப்பின் பொறியாளர்கள் அந்தந்த விவசாயிகள் சங்கங்களுக்கு தொடர்ந்து அளித்து வருவார்கள்,

v. பகிர்மான வாய்க்கால் தலைப்பில் வழங்கப்படும் தண்ணீரின் நீர் மட்டம் மற்றும் நீரோட்ட அளவுகளையும், 40 ஹெக்டேர் எல்லையில் கிடைக்கும் நீரோட்ட அளவுகளையும் நாளொன்றுக்கு ஒரு முறையாவது விவசாயிகள் சங்க அலுவலர் அல்லது விவசாயிகள் சங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒருவர் கணக்கெடுத்து ஒரு நோட்டுப் புத்தகத்தில் தொடர்ந்து பதிவு செய்தல் வேண்டும்,

vi. மேற்கண்ட நீரோட்ட அளவுகள் நீர்வள ஆதார அமைப்பின் பொறியாளர்களுடன் கலந்து பேசி முடிவில் ஒப்புக் கொண்ட அளவின்படி உள்ளதா? என்பதை ஆராயவேண்டும். அளவு குறையும்போது இது பற்றி பொறியாளர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நீர் வரத்து அளவினைச் சரி செய்து கொள்ள வேண்டும்.

vii. பாசன காலம் முடிந்த பின். பதிவு செய்யப்பட்ட நீரோட்ட அளவு விவரங்களை ஆய்ந்தறிந்து மொத்தத்தில். பாசன காலத்தில் பாசனத்திற்காக எவ்வளவு நீர் வழங்க திட்டமிடப்பட்டது? எவ்வளவு நீர் வழங்கப்பட்டது? என்பவை போன்ற விவரங்களைக் கண்டறிந்து, அடிப்படைப் பிரச்சனைகள் ஏதுமிருப்பின் அவற்றைக் களைவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் பொறியாளர்களிடம் எடுத்துரைத்து உடன் மேற் கொள்ள வேண்டும்,

viii இந்த ஏற்பாட்டின் படி சங்கப் பொறுப்பிலுள்ள பாசனப்பரப்பின் அனைத்துப் பாசனதாரர்களுக்கும் தண்ணீர் சம விகிதாசாரப்படி கிடைக்கும்,

**4.** இதர அம்சங்கள்

நீர்வள ஆதார அமைப்பின் பொறியாளர்கள் கீழ்க்கண்ட பதிவேடுகளை தயார் செய்து, விவசாய சங்கங்களிடம் ஒப்படைப்பார்கள்,

i) சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட உள்ள பாசனப் பரப்பின் வரைபடம்,

ii) சங்கத்தின் ஆட்சி எல்லைப் பரப்பிலுள்ள ஆட்சி மண்டலத் தொகுதிவாரியாக தயாரிக்கப்பட்ட அனைத்துப் பாசனதாரர்களின் பெயர் விவர பட்டியல்,

iii) பாசன அமைப்புகள் மற்றும் கட்டுமானங்கள். கால்வாய் புறம்போக்கு நிலங்கள் ஆகியவை பற்றிய விவரங்களடங்கிய பதிவேடுகள்,

iv) பாசன அமைப்புகளின் இயக்கத்திற்கான கொள்கைகளின் விவரங்கள். பிரதான கால்வாய் மற்றும் பகிர்மான கால்வாய்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றிய விவரங்கள்,

v) விவசாயிகள் சங்க அலுவலக நடப்புப் பணிகளை எவ்வாறு செயல்படுத்த வேண்டும், என்னென்ன பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும் என்பது பற்றிய விவரங்கள்,

vi) பொறுப்பேற்றுக் கொண்ட பகிர்மான பாசன அமைப்புகளின் பராமரிப்புப் பணிகள் பற்றிய விவரங்கள்.



**5.** சங்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னரும் நீர்வள ஆதார அமைப்பின் பொறியாளர்கள் தொடர்ந்து சங்கங்களின் செயற்பாட்டிற்கு அவ்வப்போது தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைகள், இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கான ஆலோசனைகள் ஆகியவற்றை தொடர்ந்து அளித்து வருவார்கள்,

**6.** பகிர்மான வாய்க்கால்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளின் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டபின் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளத் தேவையான நிதி வசதிகளை விவசாயிகள் சங்கமே பெருக்கிக் கொண்டு பணிகளைச் செய்து வர வேண்டும், நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்ளுவதற்கான வழிவகைகள் பற்றிய விவரங்கள் கீழ்வரும் பத்தி 7 ( X ) ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**7.** தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்ட விவரங்கள்

i) நோக்கம்

நீர்ப்பாசன அமைப்பு முறைகளின் மேலாண்மையில் விவசாயிகளைப் பங்கேற்கச் செய்வதே இச்சட்டத்தின் தலையாய நோக்கமாகும்,

ii) சட்டத்தின் முக்கிய பயன்கள்

(அ) இயற்கை அளித்த சொத்தான நீர்வளத்தை முழுமையாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் திறமையாகவும் சரி விகிதாசாரப்படி பங்கீடு செய்வதன் மூலம் தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தியைப் பெருக்குதல்,

(ஆ) நீர்ப்பாசன அமைப்பு முறையில் விவசாயிகளை ஈடுபடச் செய்வதன் மூலம் அவர்களிடையே அதற்கான உரிமையுணர்வை ஏற்படுத்துதல்,

(இ) நீரினைப் பயன்படுத்துபவர்களிடையே அதனை சரி விகிதாசாரப்படி பகிர்ந்தளித்தல்,

(ஈ) நீர்ப்பாசன அமைப்பு முறைகளை தேவைக்கேற்ப செவ்வனே தொடர்ந்து பராமரித்தல்,

(உ) பாசன அமைப்பின் கட்டுமானங்களைச் சிறந்த முறையில் பேண அறிவியல் சார்ந்த மேம்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்துதல்.

iii) விவசாயிகள் அமைப்புகள்

விவசாயிகள் அமைப்புகள் கீழ்க்கண்ட மூன்று அடுக்குகளில் அமைக்கப்படும்.

(அ) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் **(Water Users Association - WUA)**
(ஆ) பகிர்மானக் குழு **(Distributary Committee - DC)**
(இ) திட்டக் குழு **(Project Committee - PC)**
(ஈ) பெரிய பாசன அமைப்பு - 10,000 ஹெக்டருக்கு மேல்
நடுத்தர பாசன அமைப்பு - 2,000 முதல் 10,000 ஹெக்டேர் வரை
சிறிய பாசன அமைப்பு - 2,000 ஹெக்டருக்குக் கீழ்

iv) பாசனப் பரப்பிடத்தை வரையறுத்தல்

(அ) மாவட்ட ஆட்சியர், மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பாசன அமைப்பின் பாசனப் பரப்பிடத்தையும் நீரியல் எல்லை (Hydraulic Boundary) யின் அடிப்படையில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களாக வரையறை செய்வார். இந்த வரையறை, அறிவிக்கையாக அரசிதழில் வெளியிடப்படும். இவ்வாறு அறிவிக்கையாக வெளியிடப்பட்ட வரையறையை மாவட்ட ஆட்சியர் தாமாகவோ, மனுக்கள் / முறையீடுகள் காரணமாகவோ மேலாய்வு செய்யலாம் அல்லது திருத்தலாம்.

(ஆ) வரையறுக்கப்பட்ட விவசாயிகள் அமைப்புகளுக்கு, பிரிவு வாய்க்கால்கள் பகிர்மான வாய்க்கால்கள், வடிகால்கள், குழாய் மதகுகள் மற்றும் உள்ள கட்டுமானங்கள் கிராம எல்லைகளுடன் கூடிய பாசனப் பரப்பு அல்லது பாசனத்திற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஆயக்கட்டு இவைகளைக் காட்டும் வரைபடத்தைத் தயாரிக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுப்பார்.

V) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் (பெரிய, நடுத்தர மற்றும் சிறிய பாசன அமைப்புகள்)

(அ) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தை வரையறுத்தல், அமைத்தல். அதற்கான மேலாண்மைக் குழுவை அமைத்து தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

(ஆ) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் ஒவ்வொன்றும், நான்கிற்கும் குறையாத, ஆனால் பத்துக்கும் மேற்படாத ஆட்சி மண்டலத் தொகுதிகளாக (Territorial Constituencies) பிரிக்கப்படும்.



(இ) ஒவ்வொரு சங்கமும் அரசு வருவாய்த்துறை பதிவேடுகளில், பாசனத்திற்கு நீரினைப் பயன்படுத்துவோராக பதியப்பட்டுள்ள அனைவரையும் உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும்.

(ஈ) மேற்குறிப்பிட்டுள்ள உறுப்பினர்கள் அந்தந்த நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கான பொதுக்குழு உறுப்பினர்களாக இருப்பதுடன் வாக்களிக்கும் உரிமையும் உடையவராவர்.

(உ) ஒவ்வொரு நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கும் ஒரு மேலாண்மைக் குழு இருக்கும்.

(ஊ) தலைவர்

மேலாண்மைக் குழுவின் தலைவரை, மேற்கூறியவாறு வாக்குரிமை பெற்ற பொதுக்குழு அங்கத்தினர்களால் நேரடித் தேர்தல் மூலம், இரகசிய வாக்கெடுப்பு முறையில் தேர்ந்தெடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.

(எ) மேலாண்மைக் குழு உறுப்பினர்கள்

ஒவ்வொரு ஆட்சி மண்டலத் தொகுதியிலிருந்தும் மேலாண்மைக் குழு உறுப்பினரை நேரடித் தேர்தல் மூலம், இரகசிய வாக்கெடுப்பு முறையில் தேர்ந்தெடுக்க மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.

(ஏ) சங்க உறுப்பினர்களாக சேருதல்

நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தை வரையறுக்கும் போதே ஓட்டுரிமை பெற்ற விவசாயிகளின் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு கிராம நிருவாக அதிகாரி அலுவலகத்திலும், விவசாயிகளின் பார்வைக்காக வைக்கப்படும். விவசாயிகளின் பெயர்கள் விடுபட்டிருந்தாலும், பட்டாவில் மாறுதல் ஏற்பட்டிருந்தாலும், பெயர் விடுபட்ட விவசாயிகள், கிராம நிருவாக அதிகாரிகள் மூலமாக மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பித்து தக்க மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(ஐ) ஓட்டுரிமை

நீரினைப் பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர் ஒவ்வொருவரும், மேலாண்மைக்குழுவின் தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒரு ஓட்டும்,

அந்தந்த ஆட்சி மண்டலத் தொகுதியின் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க ஒரு ஓட்டும் போடவேண்டும், மொத்தத்தில், ஒவ்வொரு ஓட்டுரிமை பெற்ற விவசாயியும், இரண்டு ஓட்டுகள் போட வேண்டும்.

(ஓ) மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

vi) பகிர்மானக் குழு (பெரிய மற்றும் நடுத்தர பாசன அமைப்புகள் மட்டும்)

(அ) ஒவ்வொரு பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன அமைப்பிலும் உள்ள இரண்டோ அல்லது அதற்கும் மேற்பட்ட நீரினைப் பயன்படுத்துவோர் சங்கப் பரப்பிடங்கள் சேர்ந்த பரப்பு, பகிர்மானக் குழுவின் பரப்பாக அரசால் வகுத்துரைக்கப்படும்.

(ஆ) உறுப்பினர்கள்

பகிர்மானக் குழுவின் பரப்பிற்குட்பட்ட அனைத்து நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் தலைவர்களும் பகிர்மானக் குழுவின் உறுப்பினர்களாவர். இவர்களே, பகிர்மானக் குழுவின் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆவார்கள்,

(இ) தலைவர்

பகிர்மானக் குழுவினுடைய மேலாண்மை குழுவின் தலைவரை அதன் பொதுக் குழுவிலிருந்து நேரடித் தேர்தல் மூலம், இரகசிய வாக்கெடுப்பின் வாயிலாக, தேர்ந்தெடுக்க மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்வார்,

(ஈ) மேலாண்மைக் குழு உறுப்பினர்கள

பகிர்மானக் குழுவினுடைய மேலாண்மைக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்துக்கு மிகாமல் இருக்கும். இவர்களை நேரடித் தேர்தல் மூலம் , இரகசிய வாக்கெடுப்பின் வாயிலாக தேர்ந்தெடுக்க மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்வார்

(உ) மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் பகிர்மானக் குழுவின், பொதுக்குழு உறுப்பினர்களின் பதவிக்கால அளவுடன் ஒரு சேர முடிவடைவதாக இருத்தல் வேண்டும்.



Vii) திட்டக் குழு (பாசன அமைப்பு முறை மட்டத்தில் - பெரிய பாசன அமைப்புகள் மட்டும்)

(அ) ஒரு பெரிய நீர்ப்பாசன அமைப்பொன்றின் பாசனப் பரப்பிடம் அல்லது அதன் பகுதி திட்டக் குழுவின் திட்டப் பரப்பிடம் என அரசால் வகுத்துரைக்கப்படும்,

(ஆ) உறுப்பினர்கள்

திட்டக் குழுவின் பரப்பிற்குட்பட்ட அனைத்து பகிர்மானக் குழுவின் தலைவர்கள் திட்டக் குழுவின் உறுப்பினர்கள் ஆவர், திட்டக் குழுவின் பொதுக் குழு அவர்களை உள்ளடக்கியதே.

(இ) தலைவர்

திட்டக்குழுவின் மேலாண்மைக் குழுத் தலைவரை திட்டக் குழுவின் உறுப்பினர்களுக்கிடையே நேரடித் தேர்தல் மூலம் இரகசிய வாக்கெடுப்பு வாயிலாக தேர்ந்தெடுக்க மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்வார்.

(ஈ) மேலாண்மைக் குழு உறுப்பினர்கள்

திட்டக் குழுவின் உறுப்பினர்களிலிருந்து அதன் மேலாண்மைக் குழுவிற்கு ஒன்பது பேர்களுக்கு மேற்படாமல் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இத்தேர்தலுக்கு மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்வார்,

(உ) மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக் காலம் திட்டக்குழுவின். பொதுக்குழு உறுப்பினர்களின் பதவிக்கால அளவுடன் ஒரு சேர முடிவடைவதாக இருத்தல் வேண்டும்.

viii) விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பில் துணைக் குழுக்களை (Sub Committees) உருவாக்குதல்

விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பின் மேலாண்மைக் குழு, சங்க அலுவல்களைக் கவனிப்பதற்காக, அதன் உறுப்பினர்களைக் கொண்டு, தேவையான துணைக் குழுக்களை அமைத்துச் செயற்படும், அதன்படி கீழ்க்கண்ட நான்கு துணைக் குழுக்கள் விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பின் ஒவ்வொரு அடுக்கிலும் உருவாக்கப்படும்,

(அ) நிதி ஆதாரத் துணைக் குழு
(ஆ) பணிகள் துணைக் குழு

(இ) நீர் மேலாண்மைத் துணைக் குழு

(ஈ) பணி ஆய்வு, மதிப்பீடு மற்றும் பயிற்சித் துணைக்குழு.

ix) **உச்சநிலைக் குழு (Apex Committee-மாநில அளவில் )**

அரசு, அறிவிக்கையின் மூலமாக ஒரு தலைவரும் தக்க உறுப்பினர்களும் அடங்கிய உச்ச நிலைக் குழுவை உருவாக்கும்,

x) விவசாயிகள் அமைப்பின் நிதியங்கள்

(1) விவசாயிகள் செயற்பாட்டுப் பரப்பிடத்தில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வீதங்களில் வசூலிக்கப்பட்ட நீர் கட்டணங்களின் பங்காக அரசிடமிருந்து வரப்பெற்ற மானியங்கள்;

(2) செயற்பாட்டு பரப்பிடத்தின் மேம்பாட்டிற்காக அரசினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய பிற நிதியங்கள்;

(3) தனது செயற்பாட்டுப் பரப்பிடத்தில் சிக்கன மேம்பாட்டுச் செயல்கள் எதனையும் ஏற்றுக் கொள்வதற்காக நிதி நிறுவனம் எதிலிருந்தும் பெறப்பட்ட வள ஆதாரங்கள்;

(4) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளாக நீர்ப்பாசன முறையோடு சேர்ந்த சொத்துக்கள் மற்றும் உடைமைகளிலிருந்து அரசினால் வழங்கப்படக் கூடியவாறான அத்தகைய வருமானம்;

(5) 25-ஆம் பிரிவின் படி வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் அதாவது நீரினைப் பயன்படுத்துவோர் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆண்டொன்றுக்கு ஒரு ஹெக்டேருக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாதவரையிலான அத்தகைய கட்டணங்களை வசூலிக்கலாம், தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மை விதிகள் - 2002ல் உள்ள விதி 25(1)ன் படி ஹெக்டேர் ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் இருநூற்று ஐம்பது முதல் ஐநூறு ரூபாய் வரை கட்டணம் விதித்து வசூலிக்கலாம்;

(6) பிற வழி வகை எதிலிருந்தும் பெறப்படும் தொகைகள்;



(7) அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளாக, குளம் அல்லது பிற அரசு நீர்வள ஆதாரங்களின் மீன்பிடிக்கும் உரிமைகளிலிருந்து அரசினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வருமானம்;

8. அதன் செயற்பாட்டுப் பரப்பிடத்திற்குள்ளாக. கால்வாய், வடிகால் அல்லது குளம் புறம்போக்குகளில் உள்ள மரங்களில் உள்ள அனுபோக உரிமையிலிருந்து வரும் அத்தகைய வருமானம்;

xi) விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பின் அலுவல்கள்

இதுகாறும் நீர்வள ஆதார அமைப்பின் அலுவலர்கள் மட்டுமே பாசன அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளைக் கவனித்து வருகின்றனர். இச்செயற்பாடுகளில் விவசாயிகளின் பங்கு அதிகம் இல்லை. விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டத்தில் விவசாயிகளுக்கு விவசாய சங்கங்கள் மூலம் கிளை மற்றும் பகிர்மான வாய்க்கால்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளில் பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பின் அலுவலர்களுடன் இணைந்து பங்கேற்க வகை செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பாசன முறை சிறப்பாக அமையவும். வேளாண் உற்பத்தி பெருகவும் அதிகமான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

xii) கீழ்க்கண்ட முக்கியமான அலுவல்களில் பொறுப்பேற்றுச் செயலாற்ற இச்சட்டம் விவசாயிகளுக்கு வாய்ப்பளிக்கின்றது

(அ) பாசன வாய்க்கால்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல்;

(ஆ) நீர்வள ஆதார அமைப்பிடமிருந்து பகிர்மான வாய்க்கால் தலைப்பில் வழங்கப்படும் நீரை விவசாயிகள் அனைவருக்கும் சமவிகிதமாக உரிய நேரத்தில் பங்கிட்டு அளித்தல்;

(இ) சிக்கனமாக நீரினைப் பயன்படுத்தத் தேவையான பணிகளை செயற்படுத்துதல்;

(ஈ) பாசனப்பரப்பில் நீர் பங்கீட்டுப் பணிகளில் விவசாயிகளிடையே ஏற்படக் கூடிய பூசல்களைத் தீர்த்து வைத்தல்;

(உ) நிதி ஆதாரங்களைப் பெருக்குதல்;

(ஊ) விவசாயிகள் சங்கத்தின் அதிகார வரம்பிலுள்ள பரப்பிடங்களில் அமைந்துள்ள வாய்க்கால், வடிகால், குளம் மற்றும் புறம்போக்குகளில் அத்து மீறிய ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்;

(எ) பாசன அமைப்புகளுக்கும், கட்டுமானங்களுக்கும், சேதாரம் விளைவிப்பவர்களிடமிருந்து பொதுக்குழுவின் மூலம் இழப்பீடு வசூலித்தல்.

(ஏ) அவ்வாறு சேதப்படுத்திய நபர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்தல், மேற்கண்ட பொறுப்புகளும் உரிமைகளும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம், பகிர்மானக் குழு மற்றும் திட்டக் குழு ஆகிய அனைத்துக்கும் பொருந்தும்,

xiii) மேலாண்மைச் சட்டத்தின் ஆட்சி எல்லை

(அ) பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள, அனைத்து நீராதாரங்களின் பாசனப் பரப்புகளிலும், இந்த மேலாண்மைச் சட்டம் படிப்படியாக செயற்படுத்தப்படும், நீர்த் தேக்கங்கள், அணைக்கட்டுகள் மற்றும் பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பின் பராமரிப்பின் கீழ் உள்ள அனைத்து ஏரிகளும் இதில் அடங்கும்.

xiv) தகுதியுடைய அலுவலர்களை நியமித்தலும், அவரது அலுவல்களும் **(Appointment of Competent Authority and their duites ):**

(அ) அரசு அறிவிக்கையின் மூலமாக விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புகளுக்கு பணிகளைச் செயலாக்கத் தேவையான உதவிகளைச் செய்யும் பொருட்டு நீர்வள ஆதார அமைப்பின் அலுவலர்கள் தகுதி வாய்ந்த அலுவலராக நியமிக்கப்படுவார்கள்;

(ஆ) விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பினால் எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதிலும், நிறை வேற்றுவதிலும் அந்த தகுதி வாய்ந்த அலுவலர்கள் விவசாயிகள் அமைப்புகளுக்கு பொறுப்பானவர்களாக இருப்பார்கள்;



XV) இதர விவரங்கள்

மேலும். இச்சட்டத்தில் நீக்கம் செய்து அழைப்பதற்கான நடைமுறை. விவசாயிகள் அமைப்பின் மாறுதல்கள். பதவிவிலகல், காலியிடங்களை நிரப்புதல், கூட்டங்கள், கடன்தீர்நிதியம், ஆண்டுத் தணிக்கை, வரவு செலவு திட்ட மதிப்பீடு, குற்றச் செயல்களுக்கான அபராதங்கள், குற்றச் செயல்கள் மற்றும் பூசல்களை இணக்கமாகத் தீர்வு செய்தல் மேல் முறையீடு, பதிவுருக்களைப் பராமரித்தல், சங்கத்திற்கான பணத்தை வசூலித்தல். ஆணையரின் நியமனம், இடைக்கால ஏற்பாடுகள் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன;

**8.** தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மை விதிகள் - 2002

i) தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி சட்டத்திற்குத் தேவையான விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பாசனப் பரப்பிடத்தை வரையறுத்தல். நில உரிமையாளர்கள் பட்டியல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் 8 (V), 8 (VI) ல் குறிப்பிடப்பட்டுள்ள இதர விதிகள் பற்றிய விவரங்கள் இதில் அடங்கியுள்ளன;

(அ) விதி 3-ன் படி மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மாவட்ட எல்லையில் பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பின் மேலாண்மையில் கீழுள்ள, எல்லா பாசன அமைப்புகளின் பரப்பிடத்தை நீரியல் எல்லையின் அடிப்படையில் வரையறுத்து வட்ட வாரியாக படிவம் - Iல் வெளியிடுவார், அதே போன்று ஒவ்வொரு பாசன அமைப்பின் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் பாசனப் பரப்பிடத்தையும் வரையறுத்து படிவம் - IIல் வெளியிடுவார்,

(ஆ) மாவட்ட ஆட்சித் தலைவர், ஒவ்வொரு பாசன அமைப்புக்கும், பாசனப் பகுதியில் அமைந்துள்ள முதன்மைக் கால்வாய், கிளைக் கால்வாய், கண்ணிவாய்க்கால், தொடர்புடைய கட்டுமானங்கள், கிராம எல்லைகள், வடிகால்கள், சாலைகள் ஆகியவைகளைக் காட்டும் வரைபடம் தயாரிக்க ஏற்பாடு செய்வார்.

(இ) மேலும் பாசனம் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ள பகுதியின் நில அளவை எண் வாரியான பட்டியல் ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஒவ்வொரு பாசன அமைப்புக்கும், வரையறுக்கப்பட்ட நிலப் படங்களைத் தயாரிக்க ஆவன செய்கிறார்.

சாத்தனூர் இடதுபுறக் கால்வாய் பாவுப்பட்டு கிராம
நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம்




நீரினைப் பயன்படுத்துவோர் சங்க ஆட்சி எல்லை மாதிரி வரைபடம்

(ஈ) விதி 3(4)ல் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு எவ்வாறு பெயரிடப்பட வேண்டும் என்று விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய பாசன அமைப்புகளில் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் பாசனப்பரப்பு குறைந்தபட்சம் 150 முதல் 200 ஹெறக்டேர் என்று இருந்ததை தற்போது 40 ஹெறக்டேர் அளவில் இருந்தால் போதுமானது என அரசிடமிருந்து திருத்தம் பெறப்பட்டுள்ளது. அதே போன்று ஆட்சி மண்டலத் தொகுதி பாசனப் பரப்பும் கள அமைப்பினைப் பொருத்து நீரியல் எல்லையின் அடிப்படையில் (ஏறத்தாழ சம அளவில்) இருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

(உ) விதி 3 (5) முதல் 3(9) முடிய வரைபடம் தயாரிப்பதிலிருந்து அறிவிப்புப் பலகையில் பார்வைக்காக வைத்தல், ஏழு நாட்களில் மறுப்புரைகள் அல்லது கருத்துக்கள் வரப்பெற்ற பின் தேவைப்படின் திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் செய்தல், பிறகு இறுதியான வரைபடம் வெளியிடுதல் ஆகியவை பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளன. இதைப் பொறுத்த வரை



மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவே இறுதியானதாகும். விதி 3 (10)ல் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் செயல்பாட்டுப் பகுதி ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் அமைந்திருந்தால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு தேர்தல் போன்ற ஏற்பாடுகளை செயல்படுத்திட ஆணையாளர் அவர்கள் தக்க உத்தரவிட விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

iii)(அ) விதி 4ல். நில உரிமையாளர் பட்டியல் படிவம் -V- லும். வாக்காளர் பட்டியல் படிவம் V - A யிலும் வருவாய்துறையின் உடமை உரிமை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நில உரிமையாளர் அடங்கிய அறிவிக்கை வெளியிடும் நாளில், 18 வயது நிரம்பிய நில உரிமையாளர்களைக் கொண்டும் தயாரிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இரு படிவங்களும் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலக அறிவிப்புப் பலகைகளில் பார்வைக்காக வைக்கப்படும்.

(ஆ) மேற்கண்ட பட்டியலை இறுதி செய்வதற்கு முன், மறுப்புரைகள், வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்த்தல், நீக்குதல், ஆகியவற்றை முறையே படிவம் VI, VII மற்றும் VIII ல் பெற்று, சேர்க்கப்பட வேண்டிய. நீக்கப்பட வேண்டிய பெயர்களை ஒவ்வொரு பட்டியலின் (பட்டியல் V, மற்றும் பட்டியல் V-A) இறுதியில் இணைப்பாகச் சேர்க்க விதியில் ஆவன செய்யப்பட்டுள்ளது. இறுதிப்பட்டியலை மாவட்ட ஆட்சியர் படிவம் IX ல் வெளியிடுவார்.

(இ) ஒரு நில உரிமையாளர் ஒரே நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தில் பல ஆட்சி மண்டலத் தொகுதியில் நிலங்களை வைத்திருக்கும் பட்சத்திதல், ஒரு ஆட்சி மண்டல தொகுதியில் மட்டுமே வாக்களிக்க தகுதியுடைவராவார்.

(ஈ) ஒரு நில உரிமையாளர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கான இடங்களில் வெற்றி பெற்று வந்தாலும், அவர் விரும்பும் ஏதாவது ஒரு பதவியிடத்தை மட்டுமே தக்க வைத்துக் கொள்ள முடியும். அதாவது மொத்தத்தில் ஒரு பதவி மட்டுமே வகிக்க முடியும்.

(iv) விதி 5-ல் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களைச் செய்வதற்கான முறையீடு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த முறையீட்டை ஆணையரிடம் செய்து கொள்ளலாம், அவருடைய முடிவே இறுதியானதாகும்.

(v) விதி 6 மற்றும் 7-ல் முறையே பகிர்மானக் குழு மற்றும் திட்டக்குழு ஆகியவற்றின் பாசனப் பகுதிகளை வரையறுத்தல் குறித்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

(vi) உச்ச நிலைக் குழுவின் அமைப்பு அதன் அலுவல்கள், கூட்ட நடவடிக்கைகள், குறைவெண்வரம்பு (Quorum), திரும்ப அழைப்பதற்கான தீர்மானம், துணைக் குழுவின் அமைப்பு அதில் அடங்கியுள்ள குழுக்கள், அவற்றின் அலுவல்கள், விவசாயிகள் அமைப்பில் மாறுதல்கள், காலியிடங்களை நிரப்புதல், பொதுக்குழு, அதன் கூட்டங்கள், கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகள், நிர்வாகக் குழு, பொதுக்குழு அதிகாரங்கள் கட்டணங்கள் வசூலித்தல், அரசிடமிருந்து கிடைக்கும் மானியங்கள், கணக்குகள், தணிக்கைகள், வரவு செலவுத் திட்டம். குற்றங்களை இணக்கம் செய்வதற்கான நடைமுறை, பேணப்பட வேண்டிய ஆவணங்கள், பதிவேடுகள், ஆணையாளரின் அதிகாரம் போன்றவை வெவ்வேறு விதிகளில் மிகவும் விரிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

**9.** தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைத் தேர்தல் விதிகள் – 2003

(i) தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டத்தின் கூறுகள் 5,8,11 மற்றும் 19 ஆகியவற்றுக்கிணங்க இந்த தேர்தல் விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. சட்டத்தின்படி தேர்தலை நடத்துவதற்கான முழு அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் இந்த தேர்தல் விதிகளின் மூலம் மாவட்ட ஆட்சியர் மேற்கொள்ளுவார்.

(ii) தேர்தல் நடத்துவதற்கான ஆட்சி இயந்திரம். பாகம் – 2ல் கொடுக்கப்பட்டுள்ளது இதில் தேர்தல் நடத்தும் அலுவலர், உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர், வாக்குச் சாவடித் தலைமை அலுவலர், வாக்குப் பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச் சாவடிகள் அமைத்தல் ஆகியவற்றுக்கான விதிகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

(iii) பாகம் – 3ல் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கான வாக்காளர் பட்டியல், பட்டியலின் மொழி, தேவைப்படும் நகல்கள், பட்டியல் விற்பனை மற்றும் பத்திரமாகப் பாதுகாத்தல் ஆகியவை குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன,



(iv) அரசிடமிருந்து தேர்தல் நாளுக்கான அறிவிப்பு வந்தவுடன் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் பதவியிடங்களுக்கும் ஆட்சிமண்டலத் தொகுதி உறுப்பினர் பதவியிடங்களுக்கும் தேர்தல் நடத்தி நிரப்புவதற்கான தேர்தல் திட்ட அறிவிக்கையை மாவட்ட ஆட்சியர் படிவம் – 1 ல், தேர்தல் அட்டவணையுடன் மாவட்ட அரசிதழில் வெளியிடுவார். பின்னர் படிவம் – 2 ல் அதே தேர்தல் அட்டவணையும் தேர்தல் நடத்தப்படும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் மற்றும் ஆட்சி மண்டலத் தொகுதி ஆகியவற்றுக்கான விவரிப்பு, எந்த மாவட்டத்தில், வட்டத்தில், கிராமத்தில் தேர்தல் நடைபெறுகிறது என்கிற விபரம், வேட்பு மனு பெறும் இடம், வேட்பு மனு பெற்றுக்கொள்ளும் அலுவலர், வாக்குச் சாவடியின் பெயர், வாக்கு எண்ணும் இடம் ஆகியவற்றுடன் கூடிய தேர்தல் அறிவிப்பை வெளியிடுவார்.

(v) தேர்தல் அட்டவணையில் வேட்புமனுக்கள் பெறுதல், வேட்பு மனுக்களின் கூர்ந்தாய்வு, வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுதல், போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல், சின்னங்கள் ஒதுக்குதல், வாக்குப் பதிவு, வாக்கு எண்ணுதல் மற்றும் முடிவு அறிவித்தல் ஆகியவை குறித்த நாள் மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும்.

(vi) தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து வேட்பு மனுப்படிவம் – 5 ஐப் பெற்றுக் கொண்டு படிவத்தை ஆய்ந்து படித்து ஒரு தகவலும் விடாமல் நிரப்பி, முன் மொழிபவரின் விபரத்துடன் அவரது ஒப்பத்தைப் பெற்று, உறுதிமொழியில் வேட்பாளர் ஒப்பமிட்டு, படிவத்தில் இறுதியில் இரு வாக்காளரின் சாட்சிக் கையொப்பத்தைப் பெற்றபின் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் செலுத்த வேண்டும்.

(vii) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளரின் பெயர் அவர் போட்டியிடும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் எல்லையிலுள்ள ஏதாவது ஒரு ஆட்சி மண்டலத் தொகுதியில் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும். அதே போன்று முன் மொழிபவர் அந்த நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தின் ஏதாவது ஒரு ஆட்சி மண்டலத் தொகுதியில் வாக்காளராக இருக்க வேண்டும். இரண்டு சாட்சிகளும் அந்த நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்தில் வாக்காளர்களாக இருக்க வேண்டும்.

(viii) ஆட்சி மண்டலத் தொகுதி உறுப்பினர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர் அந்த ஆட்சி மண்டலத் தொகுதியில் வாக்காளராக இருக்க வேண்டும், அந்த வேட்பாளரை முன்மொழிபவரும் இரண்டு சாட்சிகளும் அதே ஆட்சி மண்டலத் தொகுதியில் வாக்காளராக இருக்க வேண்டும்.

(xi) ஒரு வாக்காளர் ஒரு வேட்பாளருக்கு மட்டுமே முன்மொழிய முடியும், ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளருக்கு முன் மொழியக் கூடாது. அதே போன்று சாட்சிகளும் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளருக்கு ஒப்பமிடக்கூடாது.

(x) ஒரு வேட்பாளருடைய வேட்பு மனு கீழ்க்கண்ட காரணங்களால் தேர்தல் நடத்தும் அலுவலரால் தள்ளுபடி செய்யப்படும்.

(அ) சட்டத்தின் கூறு 17-ல் கூறப்பட்ட வேட்பாளருக்கான தகுதியின்மை ஏதேனுமிருந்தால்;

(ஆ) வாக்காளர் பட்டியலில் வேட்பாளர் அல்லது அவரை முன்மொழிபவர் பெயர் இல்லாதிருந்தால்;

(இ) வேட்புமனுவில் வேட்பாளர் அல்லது அவரை முன்மொழிபவரது கையொப்பம் நேர்மையானதாக இல்லாதிருந்தால்;

(xi) கூர்ந்தாய்வுக்குப் பின் போட்டியிடும் வேட்பாளரின் தகுதியுள்ள வேட்புமனுக்கள் பட்டியல் படிவம் 8-ல் தயாரித்து தகவல் பலகையில் பார்வைக்கு வைக்கப்படும்.

(xii) வேட்புமனுவைத் திரும்ப பெற விரும்பும் வேட்பாளர். தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அதற்கான படிவம்-9 பெற்று, நிரப்பி, ஒப்பமிட்டு, உரிய நாளிலும், உரிய நேரத்திலும் செலுத்தி விட வேண்டும்.

(xiii) வேட்புமனுவைத் திரும்பபெற்ற வேட்பாளர் பட்டியல் படிவம் -10ல் வெளியிடப்படும், தள்ளுபடி செய்யப்படாத, வேட்புமனுவைத் திரும்பப் பெறாத வேட்பாளரின் இறுதிப் பட்டியல் படிவம்-11ல் வெளியிடப்படும்.

(xiv) வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டவுடன் போட்டியிடும் வேட்பாளருக்கு தலைவர் மற்றும் உறுப்பினருக்கு அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களிலிருந்து சின்னங்கள் ஒதுக்கப்பட்டு அதன் நகல்வேட்பாளருக்கு கொடுக்கப்படும்.



(xv) ஒரே ஒரு தகுதியுள்ள வேட்பு மனு மட்டும் இருக்கும் பட்சத்தில் அந்த வேட்பாளர் வெற்றி பெற்றதாக சாற்றுரைத்து நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் பதவிக்கோ அல்லது ஆட்சி மண்டலத் தொகுதி உறுப்பினர் பதவிக்கோ தேர்ந்தெடுக்கப்பட்டார் என படிவம் 24-ல் சாற்றுரைத்து, படிவம் -26ல் தேர்தல் சான்றிதழ் வழங்கப்படும்.

(xvi) தேர்தலுக்கு முன் வேட்பாளர் ஒருவர் இறந்து விட்டாரேயானால், மாவட்ட ஆட்சியர் மன நிறைவு அடைந்த பின், தேர்தலை தள்ளி வைக்க வேண்டும், இதனை புதிய தேர்தலைப் போல் நடத்த வேண்டும். தேர்தலை தள்ளிவைக்கும் சமயம், ஒரு தகுதியுள்ள வேட்பாளர் இருக்கும் பட்சத்தில் அவரிடமிருந்து புதிதாக வேட்பு மனு பெற வேண்டியதில்லை,

## 10. தேர்தல்

i) வேட்பாளர்களுக்கிடையே போட்டி இருக்கும் பட்சத்தில் தேர்தல் நடத்தப் பெறும்

தேர்தலை நடத்துவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர், பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன அமைப்புகளில் அமைந்துள்ள நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான ஆட்சிமண்டலத் தொகுதிகளின் வாக்குச் சாவடிகளின் பட்டியலை படிவம்-27ல் வெளியிட்டு மறுப்புரைகள் ஏதேனுமிருப்பின் கோருவார், மறுப்புரைகள் ஏதேனும் இருப்பின் பட்டியல் வெளியிட்ட மறு நாளைக்குள் தாக்கல் செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சியர் இந்த மறுப்புரைகளைக் கருத்திற்கொண்டு வாக்குச் சாவடிகளின் இறுதிப் பட்டியலை படிவம் -28- ல் வெளியிடுவார், இந்த இறுதிப்பட்டியல் சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்க அலுவலகங்களில் உள்ள தகவல் பலகைகளில் பார்வைக்கு வைக்கப்படும்.

ii) தேர்தலுக்கான வாக்குச் சாவடிகளின் அமைப்பு

(அ) ஒவ்வொரு நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கும் குறைந்தபட்சம் ஒரு வாக்குச் சாவடி அமைக்கப்பட வேண்டும். அதே போன்று ஒவ்வொரு ஆட்சிமண்டலத்தொகுதிக்கும் ஒரு வாக்குப் பதிவு பூத் அமைக்கப்பட வேண்டும். வாக்காளர்கள் அதிகமாக இருக்கும் பட்சத்தில் இந்த பூத்துகள் அதிகரிக்கப்படும், இயன்றவரை ஒரு நீரினைப் பயன்படுத்தும் சங்கத்திற்கான அனைத்து பூத்துகளும் ஒரே வளாகத்தில் அமைந்தால் வாக்காளர்கள் வந்து வாக்களிப்பதற்கும், வாக்குப் பதிவு

முடிவடைந்தவுடன் வாக்கு எண்ணிக்கையை மேற்கொள்ளவும் வசதியாக இருக்கும். இரகசிய வாக்குப் பதிவுக்காக ஒவ்வொரு பூத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட தடுப்புகள் (மறைவிடங்கள்) அமைக்கப்பட்டிருக்கும். இத்தகைய வசதியில்லாத இடங்களில், வாக்குகள் அடங்கிய வாக்குப் பெட்டிகளையும், இதர பொருட்களையும் பத்திரமாக கொண்டு செல்வதற்கும், அவைகளை பத்திரமாக பாதுகாப்பதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்ட வேண்டும். இந்த ஏற்பாடு ஒரு பொதுவான, நிர்ணயிக்கப்பட்ட வாக்கு எண்ணுகை இடத்தில், வாக்குகள் எண்ணுவது தொடங்கும் வரை செய்யப்பட வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு பூத்திலும் தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்குப் பெட்டியும், ஆட்சி மண்டலத் தொகுதி உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க, ஒரு வாக்குப் பெட்டியும் தனித்தனியாக வைக்கப்பட்டிருக்கும். இதற்காக தேவையான எண்ணிக்கையில் வாக்குப் பெட்டிகளை வழங்க மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்வார். தலைவருக்கும், உறுப்பினருக்கும் ஒரு பூத்தில் போட்டியிருக்கும் பட்சத்தில் ஒரு வாக்காளர் இரு வாக்குகளை அதாவது தலைவருக்கு ஒரு வாக்கையும், உறுப்பினருக்கு ஒரு வாக்கையும் செலுத்துவார்,

(இ) ஒவ்வொரு வாக்குச் சாவடியின் வெளிப்புறம், சாவடிக்குட்பட்ட பகுதி, அந்த வாக்குச் சாவடியில் வாக்களித்திடும் வாக்காளர் வரிசை எண்கள், போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னங்கள் ஆகியவைகளைக் காட்டும் அறிக்கை ஒன்று பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும், வாக்குப் பதிவு பூத்தின் வாயிலிலும் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக வேட்பாளர்களின் பெயர்கள், ஒதுக்கப்பட்ட சின்னங்களைக் காட்டும் அறிக்கை பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும், பூத்தின் உள்புறம் இந்த அறிக்கை வாக்குப் பெட்டிகளுக்கு மேற்புறம் வாக்காளர்களின் பார்வையில் தெரியும் படி வைக்கப்பட்டிருக்கும்,

(ஈ) வாக்குப் பதிவு முடிவடைந்த அன்றைய தினம் பிற்பகலில் வாக்கு எண்ணிக்கைக்கு ஏற்பாடு செய்யப்படும்,

iii) வாக்குப் பெட்டிகள் தயார் செய்தல்

(அ) ஒரு வாக்குப் பெட்டியைப் பாதுகாப்பதற்கு தாள் முத்திரை (பேப்பர் சீல்) பயன்படுத்தப்படும் பட்சத்தில் வாக்குச் சாவடித் தலைமையலுவலர் தாள்முத்திரையில் கையொப்பமிட வேண்டும். கையொப்பமிட



விழையும் வேட்பாளர் ஒப்பமும் பெறலாம். தாள் முத்திரை பயன்படுத்தப்படாத இடங்களில் வாக்குச் சீட்டுகள் நுழைக்கும் ஜன்னல் திறந்திருக்கும் படி வாக்குப் பெட்டியை தயார் செய்து காப்புறுதி செய்ய வேண்டும்.

(ஆ) வாக்குப் பதிவு தொடங்குவதற்கு முன் வருகை தந்துள்ள வேட்பாளர்கள், முகவர்கள் ஆகியோருக்கு வாக்குச் சாவடித் தலைமை அலுவலர் வாக்குப் பெட்டி காலியாக உள்ளது என்றும், வாக்காளர் பட்டியல் குறியீட்டுப் படியில் மாவட்ட ஆட்சித் தலைவரால் செய்யப்பட்ட திருத்தங்கள் தவிர வேறெதுவும் இல்லை எனவும், தாள் முத்திரையில் கையொப்பமிடப் பட்டுள்ளதையும் விளக்கிக் காட்ட வேண்டும், அதற்கான உறுதி மொழியில் படிவம் - 18ல் வாக்குச் சாவடித் தலைமை அலுவலர் ஒப்பமிட்டு, விரும்பும் வேட்பாளர்களின் ஒப்பத்தையும் பெற வேண்டும்,

iv) வாக்குச் சீட்டுகள்

(அ) நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் வாக்குச் சீட்டில் போட்டியிடும் வேட்பாளரின் பெயரும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சின்னங்களும் இடம் பெற்றிருக்கும், இந்த வாக்குச் சீட்டு படிவம் -12ல் இருக்கும், ஆனால் ஆட்சி மண்டலத் தொகுதி உறுப்பினர் தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் வாக்குச் சீட்டில் சின்னங்கள் மட்டுமே இருக்கும், இந்த வாக்குச் சீட்டு படிவம் - 13ல் இருக்கும்.

(ஆ) ஒவ்வொரு வாக்குச் சீட்டிற்கும் அடிச்சீட்டு உண்டு, வாக்காளர் இந்த அடிச் சீட்டில் ஒப்பமிட வேண்டும்/இடதுகை பெருவிரல் ரேகையைப் பதிக்க வேண்டும்.

v) வாக்குப்பதிவு செய்தல்

வாக்காளர் ஒருவர் பூத்தினுள் நுழைந்தவுடன் வாக்குப்பதிவு அலுவலர் - 1 வாக்காளர் பெயர், பட்டியலில் அவரது எண் ஆகியவிவரங்களை உரக்கப் படிப்பார், வாக்குப்பதிவு அலுவலர்-2 வாக்காளரின் இடதுகை ஆள்காட்டி விரலில் அடையாள மை இடுவார். அதன் பின்னர் வாக்குப்பதிவு அலுவலர்-3 தலைவருக்கான வாக்குச் சீட்டை கொடுப்பார். அந்த வாக்குச் சீட்டின் அடிச்சீட்டில்

வாக்காளர் ஒப்பமிட வேண்டும் / இடதுகை பெருவிரல் ரேகையைப் பதிக்க வேண்டும், பின்னர் வாக்குப்பதிவு அலுவலர்-5யினிடம் சென்று ரப்பர் முத்திரையைப் பெற்று வாக்களிப்பு அறையினுள் சென்று வாக்குப் பதிவு செய்து வாக்குப் பதிவு அலுவலர்-5ன் வசம் உள்ள தலைவருக்கான வாக்குப் பெட்டியில் வாக்கைச் செலுத்துவார், அதன் பின்னர் வாக்குப் பதிவு அலுவலர் - 4 யினிடம் சென்று ஆட்சி மண்டலத் தொகுதி உறுப்பினர் வாக்குச் சீட்டைப் பெற்று மேற் கூறியவாறு வாக்கு அளித்து உறுப்பினருக்கான வாக்குப் பெட்டியில் வாக்கைச் செலுத்துவார்.

vi) பெண் வாக்காளர்களுக்கான வசதிகள்

ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொது வாக்குச் சாவடியாக இருக்குமிடங்களில் தனித்தனிக் குழுக்களாக அவர்களை வாக்குச் சாவடிக்குள் அனுமதிக்க வேண்டும். பெண் வாக்காளர்களுக்கு உதவி செய்ய, தேவை ஏற்பட்டால் பரிசோதனை செய்ய உதவியாளராக பணிபுரிய ஒரு பெண்ணை நியமிக்கலாம்.

vii) வாக்காளர் ஒருவருடைய அடையாளத்தை எதிர்த்திடல்

தன்னை ஒரு குறிப்பிட்ட வாக்காளர் என உரிமை கொண்டாடும் ஒரு நபரை வேட்பாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட முகவர் எதிர்க்கலாம். அந்த நபருக்கு ஆள் மாறாட்டத்திற்கான தண்டனை பற்றி எச்சரிக்க வேண்டும். அதற்கான படிவம்-21ல் அந்த நபரின் பெயரையும், முகவரியையும் எழுதி, குறுக்கு விசாரணை செய்து, அந்த நபர் உண்மையான வாக்காளரா என்பதை சான்றுகள் காட்டி நிரூபிக்கச் சொல்ல வேண்டும். அந்த நபரின் நிரூபணம் உண்மையானால் (அதாவது எதிர்ப்பு நிரூபிக்கப்படவில்லை என்றால்) அவரை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும், நிரூபிக்கத் தவறினால் அத்தகைய நபரை பணியிலுள்ள காவலரிடம் சட்டப்படியான மேல் நடவடிக்கைக்கு ஒப்படைக்க வேண்டும். வாக்குச் சாவடித் தலைமை அலுவலரின் முடிவே இறுதியானது.

viii) ஆள் மாறாட்டத்திற்கான காப்பு

வாக்குச் சாவடிக்குள் நுழைந்த வாக்காளரின் அடையாளம் குறித்து திருப்தி ஏற்பட்டபின் இடதுகை ஆள்காட்டி விரலில் அடையாள மை இட வேண்டும். அடையாள மை இட்டுக் கொள்ள மறுக்கும் வாக்காளருக்கு வாக்குச் சீட்டை வழங்கக்கூடாது. அதாவது வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது. இந்த விதியில், இடது கை ஆள் காட்டி விரல்



இல்லை என்றால் வேறு விரல்களிலும், இருகைகளிலும் விரல்களே இல்லை என்றால் இடது அல்லது வலது கையில் முழுப்பகுதியில் குறியிட வகை செய்யப்பட்டுள்ளது.

ix) வாக்களிக்கும் முறை மற்றும் நடைமுறை

ஒவ்வொரு தேர்தலிலும் வாக்காளர் நேரில் வந்து வாக்களிக்க வேண்டும், பதிலாள் மூலமாக வாக்கு பெறப்படக் கூடாது.

வாக்களிக்கும் நடைமுறையில் வாக்குச்சாவடியில் இருக்க வேண்டிய நபர்கள், வாக்குச் சீட்டைப் பெற்றுக் கொண்டபின் வாக்களித்தல், விரைவாக வாக்களித்து வெளியேறுதல் ஆகியவை பற்றி தேர்தல் விதிகளில் விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

x) பார்வையற்ற அல்லது நலிவுற்ற வாக்காளர்கள்

பார்வையின்மை அல்லது உடல் இயலாமை காரணமாக. வாக்குச் சீட்டில் உள்ள சின்னங்களை அறிந்து கொள்ளவும், வாக்களிக்கவும் அந்த வாக்காளர் 18 வயதுக்கு குறையாத உதவியாளரை அழைத்துச் செல்ல அனுமதிக்கலாம், இந்த விதிகளின் படி செயல்படும் பொழுது இரகசியம் பாதுகாக்கப்பட வேண்டும். இத்தகைய நேர்வுகள் படிவம்-20ல் பதிவு செய்யப்படும்.

xi) வீணாக்கப்பட்ட மற்றும் திருப்பிக் கொடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள்

ஒரு வாக்காளர் கவனக் குறைவின் காரணமாக வாக்குச் சீட்டை வீணாக்கி விட்டால் வாக்குச் சாவடித் தலைமை அலுவலர் திருப்திப்பட்டால், அந்த வாக்காளருக்கு மற்றொரு வாக்குச் சீட்டை வழங்கலாம். அந்த வாக்குச் சீட்டைப் பெற்றுக் கொண்டபிறகும் வாக்களிக்க விரும்பாவிடில் அதனை உடன் திருப்பிக் கொடுத்து விடலாம்.

xii) ஆய்வுக்குரிய வாக்குகள்

ஒரு நபர் குறிப்பிட்ட வாக்காளர் என்று கூறிக் கொண்டு வாக்குச் சீட்டைக் கோரலாம். அந்த நபர் உண்மையான வாக்காளராக இருக்கலாம். ஆனால் அவருடைய வாக்கை வேறொரு நபர் அளித்து இருக்கலாம். அவருடைய அடையாளம் தொடர்பாக திருப்தியான பதில் கூறுவாரேயானால் பிற வாக்காளரைப் போன்று வாக்குச் சீட்டைப் பெற்று

வாக்களிக்க இந்த விதியின் படி உரிமை உண்டு, வாக்குச் சீட்டை வழங்கு முன் படிவம் -19ல் விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

xiii) நெருக்கடி நிலையில் வாக்கெடுப்பை ஒத்தி வைத்தல், வாக்குப் பதிவைத் தொடர்தல் மற்றும் புதிய வாக்குப் பதிவு.

(அ) யாதேனும் ஒரு வாக்குச் சாவடியில், கலவரத்தினால், வன்முறைச்செயலினால், வெள்ளம், தீ போன்றவற்றால் வாக்குப் பதிவு தடைபட்டால், பெரும்பாலான வாக்காளர்கள் வாக்குபதிவுக்கு வர இயலவில்லை என்றால் வாக்குச் சாவடித் தலைமை அலுவலர் வாக்குப் பதிவை நிறுத்தி விட்டு வாக்குச் சாவடியில் இருக்கும் வேட்பாளர், முகவர்கள் ஆகிய நபர்களுக்கு பொது அறிவிப்பு செய்வார், தேர்தல் நடத்தும் அலுவலர், பாதிக்கப்பட்ட வாக்குச் சாவடியில் வாக்குப் பதிவு நடைபெற்றிருக்க வேண்டிய எஞ்சியுள்ள கால நேரத்திற்குள் வாக்குப் பதிவைத் தொடரலாம் அல்லது நடந்த தேர்தலை முற்றிலும் புறக்கணித்து விட்டு, புதிய வாக்குப் பதிவை நடத்தலாம், இதற்கான தேர்தல் நடத்தும் அலுவலரின் உத்திரவே இறுதியானது.

(ஆ) தொடரும் வாக்குப் பதிவில், ஒத்திவைத்ததற்கு பின்னர், வாக்களிக்காத வாக்காளர்கள் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்படுவர். தொடர்வாக்குப் பதிவு முடிவு பெறும் வரையில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வாக்குகள் எண்ணப்படக் கூடாது. புதிய வாக்குப்பதிவு விதிகளுக்கேற்ப நடத்தப்படும். இந்நேர்வில் புதிய வேட்பு மனுக்கள் இருக்காது.

xiv) வாக்குப் பெட்டிகள் அழிக்கப்படுதல், வாக்குச் சீட்டுகள் அழிப்பு அல்லது இழப்பு.

தேர்தல் வாக்குச் சாவடியில் பயன்படுத்தப்பட்ட அல்லது வாக்கு எண்ணுகைக்காக நியமிக்கப்பட்ட இடத்தில் வாக்குப் பெட்டி ஏதேனும் சட்டத்திற்கு முரணாக எடுத்துச் சென்று அழிக்கப்படும் பட்சத்தில் அந்த வாக்குச் சாவடியில் மறு வாக்குப்பதிவு நடத்த ஆணையிடப்படலாம் அல்லது மறு வாக்கெடுப்பின் முடிவு தேர்தலை எவ்வகையிலும் பாதிக்காது என மன நிறைவடைந்தால் தேர்தலை தொடர்ந்து நடத்தி முடித்திட தேர்தல் நடத்தும் அலுவலர் ஆணை பிறப்பிக்கலாம், அதே போன்று வாக்குச் சீட்டுகள் அழிக்கப்பட்டாலும் அந்த வாக்குச் சாவடியில் மறுதேர்தல் நடத்த ஆணையிடப்படலாம் அல்லது வாக்கு எண்ணுதலை மேற்கொண்டு நடத்தி முடித்திட ஆணை பிறப்பிக்கப்படலாம்.



xv) வாக்கெடுப்பு நபர்கள் வாக்களிப்பில் செல்வாக்கைப் பயன்படுத்துதல்

தேர்தல் தொடர்பாக பணிபுரியும் எவரும், யாராவது வேட்பாளர்/ வேட்பாளர்களின் தேர்தல் வாய்ப்பினைக் கூடுதலாக்கும் வகையில் அதாவது வாக்களிக்கத் தூண்டுதல், வாக்களிக்காதவாறு மனம் மாற்றுதல் ஆகியவைகளில் ஈடுபட்டால் அங்கு பணியிலுள்ள காவல் அலுவலரிடம் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக ஒப்படைக்கப்பட வேண்டும்.

xvi) வாக்குச் சாவடிகளில் தகாத நடத்தை

வாக்குச் சாவடியில் வாக்குப் பதிவுக்குக் குறிப்பிட்டுள்ள நேரத்தின் போது சட்டப்படி இணங்கி நடக்கத் தவறினால் அல்லது தகாதவாறு நடந்து கொண்டால் காவல் அலுவலரால் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக வாக்கு சாவடியிலிருந்து அகற்றப்படலாம்.

xvii) வாக்குச் சாவடிகளில் அல்லது அவற்றின் அருகில் முறையற்ற நடத்தை

வாக்குப் பதிவு நாளில் வாக்குச் சாவடியின் 100 மீட்டர் தொலைவுக்குள் வாக்குக்காக ஆதரவு திரட்டுதல், வாக்காளரை இணங்குவித்தல், குரல் பெருக்கி பயன்படுத்துதல் ஆகியவற்றால் வாக்குப் பதிவுக்கு இடையூறு விளைவித்தல் ஆகியவை செய்யக்கூடாது. அவ்வாறு செய்யும் நபரை பணியிலுள்ள காவல் அலுவலரிடம் சட்டப்படி நடவடிக்கை எடுக்க ஒப்படைக்கப்பட வேண்டும்.

xviii) நீக்கப்பட்ட வாக்குகள்

வாக்குச் சீட்டைப் பெற்றுக் கொண்ட வாக்காளர் வாக்களிப்பு நடைமுறையை மீறுவாரேயானால் அவரிடமிருந்து, வாக்குப் பதிவு செய்திருந்தாலும், இல்லையென்றாலும் வாக்குச் சீட்டை திரும்பப் பெற வாக்குச் சாவடித் தலைமை அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

xix) வாக்குகள் எண்ணுகை

(அ) வாக்கு எண்ணுமிடத்தில் வேட்பாளர் அல்லது அவரால் எழுத்து மூலமாக அனுமதிக்கப்பட்ட நபர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்,

(ஆ) வேட்பாளர் அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட நபர் வாக்குப் பெட்டியை பார்வையிடுவதற்கும். முழுமை கெடவில்லை என அறிந்து திருப்திப் பட்டுக் கொள்வதற்கும் அனுமதிக்கப்படுவார்.

(இ) வாக்கு எண்ணுகை தொடர்ந்து நடத்தப்படும்.

(ஈ) தவறாக வாக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்குச் சீட்டுகளைத் தள்ளுபடி செய்யப்படுவதற்கான பல்வேறு காரணங்கள் விதி-49ல் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

(உ) வேட்பாளர் ஒருவர் வாக்கு எண்ணுகை முடிந்த பின் மறு எண்ணுகைக்கு கோருவாரேயானால், பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மறு வாக்கு எண்ணுகை நடத்த தேர்தல் நடத்தும் அலுவலர் ஆணையிடுவார். இது சம்பந்தமாக தேர்தல் நடத்தும் அலுவரிடம் எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.

xx) சமமான வாக்குகள்

வாக்கு எண்ணுகை முடிந்த பின்னர் இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் சமமான வாக்குகளைப் பெற்றிருந்தால் குலுக்கல் முறை கடைப்பிடிக்கப்பட்டு யாருடைய பெயரில் குலுக்குச் சீட்டு அமைகிறதோ அந்த வேட்பாளர் கூடுதலாக ஒரு வாக்கு பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார்.

xxi) தேர்தல் முடிவுகளை அறிவித்தல்

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய பட்டியல் படிவம் - 25ல் வெளியிடப்படும். இந்த விவரங்கள் அடங்கிய படிவம், தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலக அறிவிப்புப் பலகையிலும், நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் அலுவலக அறிவிப்புப் பலகையிலும் பொதுமக்களின் தகவலுக்காக பார்வைக்கு வைக்கப்படும்.

xxii) தேர்தல் சான்றிதழ்

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் படிவம் - 26 ல் தேர்தல் சான்றிதழை அளிப்பார்.



**11. பகிர்மானக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பதவிகளுக்கான தேர்தல்**

(i) பகிர்மானக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிகளுக்கான தேர்தல் அந்த நோக்கத்திற்காக கூட்டப்படும் சிறப்புக் கூட்டத்தில் நடத்தப்படும். அந்த சிறப்புக் கூட்டத்திற்கு பகிர்மானக் குழுவின் மொத்த பொதுக்குழு உறுப்பினர்களில் பாதிப் பேராவது தவறாது வருகை தரவேண்டும். இது குறைவெண் வரம்பு ஆகும் (உதாரணம்: பொதுக்குழு உறுப்பினர்கள் 11 பேர் என்றால் ஆறு பேர் தவறாது வருகை தரவேண்டும்).

(ii) இத்தேர்தலுக்கான அறிவிக்கை படிவம் - 3 ல் மாவட்ட ஆட்சியரால் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும். இந்த அறிவிக்கையில் காணப்படும் தேர்தல் அட்டவணையில் தலைவருக்கான தேர்தல் மற்றும் உறுப்பினர்களுக்கான தேர்தல் விவரங்கள் அதாவது வேட்பு மனுக்களைப் பெறுதல், கூர்ந்தாய்வு, வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுதல், போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை வெளியிடுதல், போட்டியிருக்கும் பட்சத்தில் தேர்தல், வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவு அறிவித்தல் ஆகிய விவரங்கள் அடங்கியிருக்கும். பின்னால் சேர்க்கப்பட்டுள்ள அட்டவணையில் தேர்தல் நடத்தப்படும் பகிர்மானக் குழுவின் பெயர் பற்றிய விவரங்கள், அது அமைந்துள்ள வட்டம், மாவட்டம், வேட்பு மனு பெறும் இடம், வேட்பு மனுவைப் பெற்றுக் கொள்ளும் அலுவலர், தேர்தல் நடக்கும் இடம், வாக்கு எண்ணும் இடம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

(iii) மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்படும் அறிவிக்கையின் நகல்கள் பகிர்மானக் குழுவின் எல்லைக்குள் அடங்கியுள்ள நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் தலைவர்களுக்கு அறிந்து கொள்ளும் பொருட்டும், தேர்தலில் பங்கு கொள்ளும் பொருட்டும் நேரிடையாக அனுப்பி வைக்கப்படும்.

(iv) தேர்தல் முறையானது, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கு தேர்தல் எந்த முறையில் கடைப்பிடிக்கப்பட்டு நடத்தப்பட்டதோ அதே முறையில் நடத்தப்படும். அதாவது வேட்புமனுக்களைப் பெறுதல், வேட்புமனுக்கள் கூர்ந்தாய்வு, வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுதல், போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் ஆகியவை தயாரித்து பார்வைக்கு வைக்கப்படும். வாக்குப் பெட்டிகள் தயாரித்தல், தேர்தல் நடத்துதல்,

வாக்கு எண்ணிக்கை, முடிவு அறிவித்தல் ஆகியவையும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தேர்தல் போன்றே அமையப் பெறும்.

v) தலைவர் தேர்தல்

அ) வாக்களிப்பு தொடங்குவதற்கு முன்னால் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் பகிர்மானக் குழுவின் பொதுக்குழுவிற்கு வருகை தந்துள்ள உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்படும். நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களின் தலைவர்கள் வாக்காளர்கள் ஆவர். வாக்காளர் பட்டியல் தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மை விதிகள் - 2002 ல் உள்ள படிவம் 5-B யில் அமைந்திருக்கும்.

ஆ) தலைவருக்கான தேர்தல் வாக்குச்சீட்டுகள் மூலமாக இருக்கும். வாக்குச் சீட்டு, படிவம் - 14ல் தயாரிக்கப்படும். வாக்குச் சீட்டைப் பெற்றுக் கொண்ட வாக்காளர் மறைவிடத்திற்கு சென்று அவர் விரும்பிய தலைவர் பெயருக்கு நேராக (✓)குறியிட்டு மேசை மீது வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டிக்குள் வாக்கைச் செலுத்துவார்.

இ) வாக்குகள் எண்ணப்பட்டு அதிக எண்ணிக்கை பெற்ற வேட்பாளர் தலைவராக அறிவிக்கப்படுவார். சமமான வாக்குகள் பெற்ற நேர்வில் குலுக்கல் முறை அனுசரிக்கப்படும். தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரின் பெயர் படிவம் - 25 ல் வெளியிடப்படும். படிவம் - 26 ல் தேர்தல் சான்றிதழ் அளிக்கப்பெறும்.

(vi) உறுப்பினர்கள் தேர்தல்

அ) மேலாண்மைக் குழுவுக்கு ஐந்து பேருக்கு மிகாமல் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். பொதுக்குழு உறுப்பினர்கள் ஆறு பேர் இருக்கும் பட்சத்தில் தலைவர் தவிர ஐந்து பேருமே உறுப்பினர்களாகத் தகுதி பெறுவர். ஆனால் அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்து அறிவிக்கப்பட வேண்டும். தலைவர் தவிர பொதுக்குழு உறுப்பினர்கள் ஐந்து பேருக்கு மேல் இருக்கும் பட்சத்தில், சட்டத்தின் படி ஐந்து பேரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தப் பெறும். வாக்காளர் பட்டியல் தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மை விதிகள் - 2002ல், உள்ள படிவம் 5-B யில் இருக்கும், வாக்குச் சீட்டு, படிவம் - 15ல் இருக்கும். ஒவ்வொரு வாக்காளரும் ஐந்து பேருக்கு வாக்களிக்க வேண்டும். வாக்குகள் எண்ணப்பட்டு அதிக எண்ணிக்கை பெற்ற வேட்பாளர்கள் வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப்படுவார்கள், சமமான வாக்குகள் பெற்ற நேர்வில் குலுக்கல் முறை அனுசரிக்கப்படும்,



ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் விவரங்கள் படிவம் - 25 ல் வெளியிடப்படும், தேர்தல் சான்றிதழ் படிவம் - 26 ல் அளிக்கப்பெறும்.

**12.** திட்டக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவிகளுக்கான தேர்தல்

i) திட்டக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிகளுக்கான தேர்தல் அந்த நோக்கத்திற்காக கூட்டப்படும் சிறப்புக் கூட்டத்தில் நடத்தப்படும். அந்த சிறப்புக் கூட்டத்திற்கு திட்டக் குழுவின் மொத்த பொதுக்குழு உறுப்பினர்களில் பாதிப் பேராவது தவறாது வருகை தரவேண்டும். இது குறைவெண் வரம்பு ஆகும்.
(உதாரணம்: பொதுக்குழு உறுப்பினர்கள் 11 பேர் என்றால் ஆறு பேர் தவறாது வருகை தரவேண்டும்)

ii) இத்தேர்தலுக்கான அறிவிக்கை படிவம் - 4 ல் மாவட்ட ஆட்சியரால் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும். இந்த அறிவிக்கையில் காணப்படும் தேர்தல் அட்டவணையில் தலைவருக்கான தேர்தல் மற்றும் உறுப்பினர்களுக்கான தேர்தல் விவரங்கள் அதாவது வேட்பு மனுக்களைப் பெறுதல், கூர்ந்தாய்வு, வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுதல், போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை வெளியிடுதல், போட்டியிருக்கும் பட்சத்தில் தேர்தல், வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவு அறிவித்தல் ஆகிய விவரங்கள் அடங்கியிருக்கும், பின்னால் சேர்க்கப்பட்டுள்ள அட்டவணையில் தேர்தல் நடத்தப்படும் திட்டக் குழுவின் பெயர் பற்றிய விவரங்கள், அது அமைந்துள்ள மாவட்டம், வேட்பு மனு பெறும் இடம், வேட்பு மனுவைப் பெற்றுக் கொள்ளும் அலுவலர், தேர்தல் நடக்கும் இடம், வாக்கு எண்ணும் இடம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

iii) மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்படும் அறிவிக்கையின் நகல்கள் திட்டக் குழுவின் எல்லைக்குள் அடங்கியுள்ள பகிர்மானக் குழுக்களின் தலைவர்களுக்கு அறிந்து கொள்ளும் பொருட்டும், தேர்தலில் பங்கு கொள்ளும் பொருட்டும் நேரிடையாக அனுப்பி வைக்கப்படும்.

iv) தேர்தல் முறையானது, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கு மற்றும் பகிர்மானக் குழுக்களுக்கு தேர்தல் எந்த முறையில் கடைப்பிடிக்கப்பட்டு நடத்தப்பட்டதோ அதே முறையில் நடத்தப்படும். அதாவது வேட்புமனுக்களைப் பெறுதல், வேட்புமனுக்கள் கூர்ந்தாய்வு, வேட்பு

மனுக்களைத் திரும்பப் பெறுதல், போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப் பட்டியல் ஆகியவை தயாரித்து பார்வைக்கு வைக்கப்படும். வாக்குப் பெட்டிகள் தயாரித்தல், தேர்தல் நடத்துதல், வாக்கு எண்ணிக்கை, முடிவு அறிவித்தல் ஆகியவையும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தேர்தல் மற்றும் பகிர்மானக் குழுக்கள் தேர்தல் போன்றே அமையப் பெறும்.

v) தலைவர் தேர்தல்

அ) வாக்களிப்பு தொடங்குவதற்கு முன்னால் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் திட்டக் குழுவின் பொதுக்குழுவிற்கு வருகை தந்துள்ள உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்படும். பகிர்மானக் குழுக்களின் தலைவர்கள் வாக்காளர்கள் ஆவர், வாக்காளர் பட்டியல் தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மை விதிகள்-2002 ல் உள்ள படிவம் 5-C யில் அமைந்திருக்கும்.

ஆ) தலைவருக்கான தேர்தல் வாக்குச் சீட்டுகள் மூலமாக இருக்கும். வாக்குச் சீட்டு, படிவம் - 16 ல் தயாரிக்கப்படும். வாக்குச் சீட்டைப் பெற்றுக் கொண்ட வாக்காளர் மறைவிடத்திற்கு சென்று அவர் விரும்பிய தலைவர் பெயருக்கு நேராக (✓)குறியிட்டு மேசை மீது வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டிக்குள் வாக்கைச் செலுத்துவார்.

இ) வாக்குகள் எண்ணப்பட்டு அதிக எண்ணிக்கை பெற்ற வேட்பாளர் தலைவராக அறிவிக்கப்படுவார், சமமான வாக்குகள் பெற்ற நேர்வில் குலுக்கல் முறை அனுசரிக்கப்படும். தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரின் பெயர் படிவம்-25ல் வெளியிடப்படும். படிவம் - 26 ல் தேர்தல் சான்றிதழ் அளிக்கப்பெறும்.

vi) உறுப்பினர்கள் தேர்தல்

அ) மேலாண்மைக் குழுவுக்கு ஒன்பது பேருக்கு மிகாமல் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். பொதுக்குழு உறுப்பினர்கள் பத்து பேர் இருக்கும் பட்சத்தில் தலைவர் தவிர ஒன்பது பேருமே உறுப்பினர்களாகத் தகுதி பெறுவர். ஆனால் அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்து அறிவிக்கப்பட வேண்டும். தலைவர் தவிர பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்பது பேருக்கு மேல் இருக்கும் பட்சத்தில், சட்டத்தின் படி ஒன்பது பேரைத்



தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தப் பெறும். வாக்காளர் பட்டியல் தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மை விதிகள்-2002, படிவம் 5-C யில் இருக்கும், வாக்குச் சீட்டு, படிவம்-17ல் இருக்கும், ஒவ்வொரு வாக்காளரும் ஒன்பது பேருக்கு வாக்களிக்க வேண்டும். வாக்குகள் எண்ணப்பட்டு அதிக எண்ணிக்கை பெற்ற வேட்பாளர்கள் வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப்படுவார்கள்,சமமான வாக்குகள் பெற்ற நேர்வில் குலுக்கல் முறை அனுசரிக்கப்படும்,

ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் விவரங்கள் படிவம்-25ல் வெளியிடப்படும். தேர்தல் சான்றிதழ் படிவம் - 26 ல் அளிக்கப்பெறும்.

இ) இதுவரை தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டம் - 2000 ல் உள்ள சட்டப்பிரிவுகள், விதிகள் - 2002, மற்றும் தேர்தல் விதிகள் - 2003ல் இடம் பெற்றுள்ள விதிகள் பற்றிய விவரங்கள், அறிந்து கொள்வதற்காக சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன, புத்தக வடிவில் இருக்கும் இந்த சட்டம் மற்றும் இரண்டு விதிகளையும் நன்கு படித்து அனைத்து விபரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்

பிற விவரங்கள்

சட்டப் பிரிவுகள் மற்றும் விதிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய வெளியீடுகள், வழிகாட்டி நூல்கள் ஒவ்வொரு சங்க அலுவலகத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

மேலும். இது பற்றிய விவரங்களை மேற்குறிப்பிட்ட நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்ளவும் அல்லது

உங்கள் அருகிலுள்ள பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பின் பிரிவு அலுவலர் அவர்களை அணுகவும்.